




கேரளாவில் வைக்கம் பகுதியில் பெரியார் நினைவகத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கம் பகுதியில் தந்தை பெரியார் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு, வெற்றி கண்டதன் நினைவாக, தமிழ்நாடு அரசு சார்பில் 70 சென்ட் பரப்பில் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், அருங்காட்சியகம், நூலகம், சிறுவர் விளையாட்டுப் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளன. மேலும், அமர்ந்த நிலையில் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையில் வைக்கத்தில் உள்ள பெரியார் நினைவிடத்தை மறுசீரமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. அதன்படி அங்கு நடைபெறும் கட்டுமான பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். அப்பணிகள் 7 மாதங்களுக்குள் முடிவடையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# ஆக.2 முதல் 11 வரை வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆய்வுக்கூட்டம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

குமரி, ஆக.2-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 31.07.2023 அன்று மாலை 5.00 மணிக்கு குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத் தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கொரோனா பேரிடர் கால நிவாரணமாக கழக அரசு வழங்கிய நிவாரண தொகையை பெற்று தனது புன்னகை வழியாக மக்களின் எண்ணங்களை பிரதிபலித்த நாகர்கோவில் மாநகரம், கீழகலுங்கடி பகுதியை சார்ந்த வேலம்மாள் பாட்டி அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

01.01.2024 நாளை தகுதி ஏற்பு நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் 01.01.2024ல் 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும்புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்பொழுதுள்ள பட்டியலில் நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது தி.மு.க. சார்பாக தொகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (8ட&, 2) தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் (80) இணைந்து மேற்கண்டவாக்காளர் பட்டியல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பு பணி மற்றும் சிறப்பு முகாம்களில் குமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியல் சீரமைப்பு பணிகளில் தங்களை ஈடுபடுத்தி கொள்ளுமாறு இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஆகஸ்ட். மாதம் 17ம் தேதி இராமநாதபுரத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி

முகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள். எனவே

குமரி கிழக்கு மாவட்டத்திற்குட் பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய 3 சட்டமன்றத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என ஒக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

02.08.2023 முதல் 11.08.2023 வரை ஒன்றிய / நகர / பகுதி கழகங்களில்

உள்ள வாக்குச்சாவடி முகவர்களுக்கான (80&2) ஆய்வு கூட்டம் நடத்துவது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகிற 07.08.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு

தினத்தை முன்னிட்டு வடசேரி அண்ணா சிலை அருகில் இருந்து அமைதி ஊர்வலம்து வங்கி மணி மேடை சந்திப்பு, அரசமூடு சந்திப்பு வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

இதில் அனைத்து கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில்

# ‘வந்தேபாரத்’ ரயில் நின்று செல்ல அனுமதிக்க வேண்டும்

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 2-

சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் ‘வந்தே பாரத்’ எக்ஸ்பிரஸ் ரயில் நின்று செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தினார்.

இது குறித்து விதி எண் 377ன் கீழ் அவர் வலியுறுத்தியதாவது:-

தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகர் ஒன்றின் பக்கத்தில் உள்ள ஜோலாப்பேட்டை ரயில்வே ஜங்ஷனின் முக்கியத்துவம் பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அது மிகப்பெரிய ரயில் நிலையம் மட்டுமல்ல; தென்னிந்தியாவின் பல் வேறு பகுதிகளுக்கான ரயில்கள் கடந்து செல்லும் ரயில் நிலையமும் ஆகும்.

அது மட்டுமின்றி ஏலகிரி என்கிற மலைப்பிரதேசம் ஜோலார்ப் பேட்டைக்குப் பக்கத்திலேயே இருக்கிறது. அது ஒரு முக்கியமான சுற்றுலாதலமாகும்.

அதன் காரணமாக, எம்.ஜி.ஆர். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து கோவை செல்லும் ‘வந்தே பாரத்’ ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும் என்று பெருவாரியான மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அது நியாயமான கோரிக்கையும் கூட.எனவே இந்த ‘வந்தே பாரத்’ எக்ஸ்பிரஸ் ரயில் (20643-20644) ஜோலார்ப்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது பொதுமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதோடு ஏலகிரி மலைக்கு வரும் உள்நாடு - வெளிநாடு சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி சடையல்பட்டியில் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பவானி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர்டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சரவணகுமார் எம்எல்ஏ மாபெரும் கோலப்போட்டிதுவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக தங்க நாணயம் இரண்டாவது மூன்றாவது பரிசாக குத்து விளக்கு வழங்கினார்கள்உடன் போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஐயப்பன் மாவட்டத் துணை. செயலாளர் திரு கண்ணன் பிசி பட்டி பேரூராட்சி செயலாளர் செல்வராஜ் கிளைச் செயலாளர் ஆனந்த கிருஷ்ணன் மகளிர் அணி நிர்வாகிகள் மாலா ராதிகா மணிமேகலை அழகுமணி கிருஷ்ணவேணி அனுசுயா மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

### முத்தமிழறிஞர் கலைஞர் 5வது நினைவு நாள்:

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆக.7 அன்று அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு - மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக- தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட **முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, ஆகஸ்ட்7, திங்கட் கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி,

தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**-சென்னை மாவட்ட தி.மு.க.**



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 31.07.2023 அன்று மாலை 5.00 மணிக்கு குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. நாகர்கோவில் மாநகரச் செயலாளர்வழக்கறிஞர் ப. ஆனந்த் அவர்கள் முன்னிலை வகித்தார். கூட்டத் தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு கழகத்தினர் பங்கேற்பு

# மதுரை மாநகரில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

மதுரை, ஆக. 2-

மதுரை மாநகர் மாவட்டம் 67வது வட்ட கழகத்தின் சார்பாக கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி இளைஞர்கள் அனைவரும் வேலை வாய்ப்பினை பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தனியார் வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்றது. அதன்விபரம்.

மதுரை மாநகர் மாவட்டம் 67வது வட்டக் கழக செயலாளர் ராஜேஸ் என்ற பாக்கியராஜ் ஏற்பாட்டில் விராட்டிபத்தில் சுமார் 85க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்ற சிறப்பு வேலை வாய்ப்புமுகாம் நடைபெற்றது. இம்முகாமினை மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்மட்ட செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்கள். பழங்காநத்தம் பகுதி செயலாளர் எஸ்.வி.சுதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இம்முகாமில் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படித்த இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பங்கேற்றார்கள். அவ்வாறு பங்கேற்று நிறுவனங்கள் மூலம் தேர்வானவர்களுக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தி பேசினார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனசெல்வம், அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு, துணை செயலாளர்கள் சி.சின்னம்மாள், மூவேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், முத்துகணேசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.கணேசன், மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர் பாக்கியநாதன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் வீரகணேசன், மாமன்ற உறுப்பினர் நாகநாதன், பகுதி செயலாளர் எஸ்.எஸ்.மாறன், அறிவுநிதி, இலக்கிய அணி திராவிடமாரி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.



இராமநாதபுரம் மாவட்டம், செய்யது அம்மாள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (01.08.2023) பள்ளி கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, கலந்துகொண்டு மாணவ மாணவியர்களுக்கு விலை இல்லா மிதிவண்டியை வழங்கினார். இவ்விழாவில். மாவட்ட ஆட்சித்தலைவர் பா. விஷ்ணு சந்திரன்,ராமநாதபுரம் நகர மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம் துணை தலைவர் டி. ஆர் .பிரவீன் தங்கம் ,மற்றும் இராமநாதபுரம் ஒன்றிய பெருந்தலைவர் கே. டி. பிரபாகரன்,மாவட்ட கவுன்சிலர் போகலூர் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கதிரவன், மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலமுத்து, உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் மாணவ – மாணவியர்கள் ஆசிரியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.